1994 நவம்பர் 7] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

என்றும், மைய அரசுக்கு விளக்கமாக 2 அறிக்கைகள் அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதேபோல், பயிர்கள் எவ்வளவு சேதம் அடைந்திருக்கின்றன, ரோடுகள் எவ்வளவு சேதம் அடைந்திருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் விளக்கமாக மைய அரசுக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஜீனத் சர்புதீன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைமுன், 1994–95–ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் (பத்தாவது சட்ட மன்றப் பேரவை) 46 முதல் 48 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

5. மின்வாரிய நிதிநிலை அறிக்கை, 1994-95 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1993-94 மீது விவாதம்--தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் மீது விவாதம் தொடர்ச்சி. சென்ற வெள்ளிக்கிழமை அன்று பேசி, பாதியில் பேச்சை நிறுத்தியிருந்த திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் இன்றைக்குத் தொடருவார்கள்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மின்துறை மீதான விவாதத்தில், சென்ற வெள்ளிக்கிழமை நான் பேசிய பேச்சின் தொடர்ச்சியாக இன்று பேச அனுமதித்ததற்காக, என்னுடைய நன்றியினையும், பாராட்டையும், வணக்கத்தையும் தங்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.